# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## <u>செய்தி வெளியீடு</u>

கடந்த ஞாயிறு (11.11.2018) அன்று நடந்த தொகுதி-II தேர்வுக்கான வினாத்தாளில் தந்தை பெரியாரின் பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது; இதற்குக் காரணமானவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என செய்திகள் வெளிவந்துள்ளன.

இதுகுறித்து தெரிவிக்கப்படுவது யாதெனில், தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு வினாத்தாள் தயாரிக்கும் பணியினை அனுபவம் மிக்க பல்வேறு பேராசிரியர்கள் செய்கின்றனர். மேலும், வினாக்கள் பல நிலைகளில் வேறு சில பேராசிரியர்களால் சரிபார்க்கப்பட்டு இறுதி செய்யப்படுகிறது. இதே நடைமுறை தான் 70 ஆண்டுகளுக்கும் மேலாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு மிகுந்த கவனத்துடன் தயாரிக்கப்பட்டும், தந்தை பெரியார் அவர்களின் பெயரைத் தவறாக தொகுதி-II கேள்வித்தாளில் குறிப்பிடப்பட்டதற்கு தேர்வாணையம் தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

இத்தவறுக்கு காரணமான நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதுடன் இனிவருங்காலங்களில் இதுபோன்ற தவறுகள் நடைபெறா வண்ணம் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் தேர்வாணையம் தெரிவிக்கிறது.

**க. நந்தகுமார் இ.ஆ.ப**
செயலாளர் மற்றும்
தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் (பொறுப்பு)